**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**
CC.No.46/2024
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : முகமதுஅமீர்கான் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் :நயினார்கனி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

12.02.2026

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர், 2 மற்றும் 3ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் கீழக்கரை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.09.2023ம் தேதி நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 11.55 மணியளவில் 35 வயது மதிக்கத்தக்க கோவிந்தராஜ் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர்களின் பரிந்துரையின்பேரில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். நான் அவரை பரிசோரித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு முகம் முழுவதும் வீக்கத்துடனும், இரு கண்களும் சிவந்த நிலையிலும் காணப்பட்டது. அவருடைய முதுகிற்கு கீழ்பகுதியில் 3x3cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

2. நான் கோவிந்தராஜ்யிடம் மேற்படி காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டபோது அவர் என்னிடம் 01.09.2023ம் தேதி இரவு 11.30 மணியளவில் தன்னை அடையாளம் தெரியாத 10 நபர்கள் கையால் தாக்கியதாக தெரிவித்தார். நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் 9 நாட்கள் வரை சிகிச்சையில் இருந்தார். அவர்

சிகிச்சையில் இருந்தபோது இடது கை மோதிர விரலில் வலி இருப்பதாக தெரிவித்ததால் 04.09.2023 ம் தேதியன்று அவருக்கு மேற்படி விரல் பகுதியை எக்ஸ்ரே எடுத்து பார்த்தபோது விரலில் எலும்பு முறிவு இருந்தது. அதற்கு எலும்பு மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதற்காக பரிந்துரை செய்தேன். அதன்பேரில் அவருக்கு உரிய வைத்தியம் வழங்கப்பட்டது.

3. பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் நான் அளித்தது தான். **மேற்படி விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) போலிசார் என்னை விசாரித்தபோது கோவிந்தராஜ் இடது மணிக்கட்டில் காயத்துடன் வந்ததாக கூறியுள்ளேன் என்றால் அப்படி நான் கூறவில்லை. போலிசார் என்னை அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். எந்ததேதியில் போலிசார் என்னை விசாரித்தனர் என்றால் அது எனக்கு நினைவில் இல்லை. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கோவிந்தராஜ் மருத்துவமனைக்கு வரும்போது அவருக்கு முகத்தில் வீக்கமும் இரு கண்கள் சிவந்த நிலையிலும், முதுகில் சிராய்ப்பு காயங்களும் இருந்ததாக போலிசார் விசாரித்தபோது கூறினேனா என்றால் தற்போது நினைவில் இல்லை.

2) 3x3cm அளவில் சிராய்ப்பு காயமானது கோவிந்தராஜ்யின் முதுகின் கீழ் பகுதியில் காணப்பட்டது. அந்த சிராய்ப்பு காயத்தின் வடிவம் எப்படி இருந்தது என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை. நான் சிராய்ப்பு காயத்தை பார்த்து அதற்கு உரிய சிகிச்சை வழங்கி இருந்தார் எனக்கு சிராய்ப்பு காயத்தின் வடிவம் தெரிந்திருக்கும் என்றால் நான் சிராய்ப்பு காயத்தின் தன்மைக்கு ஏற்ப உரிய சிகிச்சை வழங்கினேன். ஆனால் காயத்தின் வடிவத்தை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்பதால் என்னால் தற்போது நினைவுபடுத்தி கூறமுடியவில்லை. ஒரு காயத்தின் வடிவத்தை வைத்து அந்த காயம் எவ்வாறு

உண்டானது என்பதை மருத்துவரால் கண்டுபிடிக்க முடியும் என்றால் சரிதான். கையால் அடித்தால் சிராய்ப்பு காயம் வராது என்றால் உள்ளங்கை சதை பட்டால் வராது ஆனால் நகம்பட்டால் சிராய்ப்பு காயம் வரும். கோவிந்தராஜ் மருத்துவமனைக்கு வரும்போது அவர் ஆரோக்கியமாக வந்தார் என்றால் சரிதான். அவர் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது கோவிந்தராஜ்க்கு தேவையான சாப்பிடுவது, உடை மாற்றுதல் போன்ற வேலைகளை அவரே செய்துகொண்டார் என்றால் சரிதான் என்று சாட்சி கூறிவிட்டு பிறகு அவருக்கு இடது கையால் வேலை செய்ய இயலாது என்று மாற்றி கூறினார்.

3) 10 பேர் சேர்ந்து கோவிந்தராஜ்யை இடது கை மோதிர விரலில் தாக்கியதாக என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கோவிந்தராஜ்க்கு மோதிர விரலில் ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து போலிசார் விசாரித்தபோது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் 20 நாட்கள் வரையில் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றால் மட்டுமே கொடுங்காயம் எற்பட்டுள்ளது என தெரியவந்தால் மட்டுமே கொடுங்காயம் என சான்று அளிக்கமுடியும் என்றால் சரிதான். நான் விபத்து பதிவேட்டில் கோவிந்தராஜ்யின் கைரேகை வாங்கவில்லை என்றால் சரிதான். நான் கூறியபடி கோவிந்தராஜ்க்கு கொடுங்காயம் ஏற்படவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கொடுங்காயம் என சான்று வழங்கினேன் என்றாலும் சரியல்ல.